இணைப்பு-III

(46 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பை காண்க)

மானியக் கோரிக்கை எண். 60

பல்வகை மூலதனச் செலவு

1995-96 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு

இது கூட்டு மானியக் கோரிக்கையாகும். எழுதுபொருள்-அச்சுத் துறை, கல்வி, விளையாட்டுகள், கலை, பண்பாட்டு, வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்சி, செய்தி-வளம்பரம், ஆதி திராவிடர்-பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் நலன், சமூகப் பாதுகாப்பும் நலனும், சத்துணவு, ஏனைய சமூகப் பணிகள், கால்நடை வளர்ப்பு, பால்பண்ணை வளர்ச்சி, மீனளம், உணவுப்பொருள் சேமிப்பு-கிடங்கு வசதி, கூட்டுறவு, வெள்ளக் கட்டுப்பாட்டு திட்டங்கள், சாலைகள்-பாலங்கள், சுற்றுலா ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் ஆகியவை குறித்த மூலதனச் செலவு இந்த மானியக் கோரிக்கையில் அடங்கும்.

பல்வேறு துறைகளின் வருவாய்க் கணக்கில் செலவு குறித்த மானியக் கோரிக்கைகளைத் தாக்கல் செய்கையில் பல்வேறு துறைகளுக்கு நிதியுதவி அளிப்பதன் பின்னணியில் உள்ள பொதுவான கொள்கை விளக்கப்பட்டுள்ளது. இக்குறிப்பு, இந்த மானியக் கோரிக்கையில் செய்யப்பட்டுள்ள முக்கியமான நிதி ஒதுக்கங்களை மட்டுமே குறிப்பாகக் கோடிட்டுக் காட்டுகிறது. பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த நிலை பற்றிய விவரங்களைத் தாக்கல் செய்கையில் இந்த முக்கிய நிதியொதுக்கங்கள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிதி ஒதுக்கங்கள் தொடர்பாக முக்கியமான பெருந்தலைப்பு வாரியான தனித் தனி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கணக்குத் தலைப்பு (1)	1994-95 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (2)	1994-95 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு (3)	1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (4)
	(மொத்தச் செலவு ரூபாய் இலட்சத்தில்)		
4058. எழுதுபொருள் அச்சுத் துறை குறித்த மூலதனச் செலவு	313.45	20.71	316.16

(1)	(2)	(3)	(4)
	(மொத்தச் செலவு ரூபாய் இலட்சத்தில்)		
4070. ஏனைய நிருவாகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு	0.01	308.28	2015.26
4202. கல்வி, விளையாட்டுக்கள், கலை-பண்பாடு குறித்த மூலதனச் செலவு	0.01	0.01	2535.33
4210. மருத்துவம் பொதுச் சுகாதாரம் குறித்த மூலதனச் செலவு	--	100.00	--
4216. வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு	514.97	531.68	1057.75
4217. நகர்ப்பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு	1500.00	1500.00	2000.01
4220. செய்தி-விளம்பரம் குறித்த மூலதனச் செலவு	2.02	2.02	30.01
4225. ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம் குறித்த மூலதனச் செலவு	1184.25	1201.84	1284.26
4235. சமூகப் பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு	0.02	0.01	0.01
4236. சத்துணவு குறித்த மூலதனச் செலவு	100.00	100.00	200.00
4250. ஏனைய சமூகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு	736.34	507.12	597.24
4403. கால்நடை வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு	15.04	15.04	5.05
4404. பால்பண்ணை வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு	0.02	0.02	75.02
4405. மீனளம் குறித்த மூலதனச் செலவு	58.47	262.28	80.49
4408. உணவு சேமிப்பு கிடங்கு வசதி குறித்த மூலதனச் செலவு	147.01	147.01	200.01

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1995 மே 5]

(1)	(2)	(3)	(4)
	(மொத்தச் செலவு ரூபாய் இலட்சத்தில்)		
4425. கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு	174.40	335.02	331.57
4551. மலைப்பகுதிகள் குறித்த மூலதனச் செலவு	0.01	11.51	12.01
4711. வெள்ளக்கட்டுப்பாட்டுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு	129.48	100.43	131.05
4851. கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு	-	-	0.01
4860. நுகர்வோர் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு	--	--	100.01
5054. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு	0.10	2.65	0.03
5452. சுற்றுலா குறித்த மூலதனச் செலவு	30.33	30.32	140.84
5465. பொது நிதி-வர்த்தக நிறுவனங்களில் முதலீடு	--	3.75	--
5475. ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனச் செலவு	1.32	1.32	1.32

இம் மானியக் கோரிக்கையின் கீழ்வரும் சில முக்கிய திட்டங்களும் அவற்றிற்குச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்களும் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

எழுதுபொருள் அச்சுத்துறை

சென்னை அரசு மைய அச்சகத்தை நவீனப்படுத்துவதற்காக இயந்திரங்களை வாங்குவதற்கு ரூ. 3 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மதுரை, சென்னை, புதுக்கோட்டை, திருச்சி, விருத்தாசலம், சேலம் ஆகிய இடங்களில் உள்ள அரசு கிளை அச்சகங்களுக்கான

இயந்திரங்கள் வாங்குவதற்காக ரூ. 16.15 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஏனைய நிருவாகப் பணிகள்

காவல் துறையை நவீனப்படுத்துவது உட்பட சென்னை காவல்துறை இயக்குநர் அலுவலகத்திற்கு நவீன பன்மாடிக் கட்டிடம் கட்டுவதற்கும் சேர்த்து 1995–96 ஆம் ஆணடிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 20 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. புவியியல்-சுரங்கத் துறைக்குக் கட்டிடம் கட்ட ரூ. 15.26 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

கல்வி, விளையாட்டு, கலை-பண்பாடு

தெற்கு ஆசிய ஃபெடரேஷன் விளையாட்டு போட்டியினை நடத்துவதற்காக, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு அதிகார மன்றத்திற்கு நிதி உதவியாக ரூ. 25 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசு அருங்காட்சியத்தில் மேம்பாடுகளைச் செய்ய, இயந்திரங்கள்--சாதனங்கள் வாங்க, மேலும் ரூ. 22 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. அரசு சுவடி நூலகத்தில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள 1995–96 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 13.32 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

வீட்டுவசதி

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம், காவல்துறைப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்காக, 1995–96 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 10.50 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

நகர்ப் பகுதி வளர்ச்சி

பெருநகர அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகத்திற்கான (மாபெரும் நகர்) மாநில அரசின் பங்கு மூலதன உதவித் தொகையாக 1995–96 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 20 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

செய்தி-விளம்பரம்

தமிழரசு அச்சகத்திற்கான இயந்திரங்கள், சாதனங்கள் வாங்க ரூ. 30 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

1995 மே 5]

ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்

பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்

ஆதி திராவிடர் நல பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்ட, *1995–96* ஆம் ஆண்டில் ரூ. *172.69* இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

மாணவர் இல்லங்கள் கட்டுதல்:

ஆதி திராவிடர்களுக்கான அரசு மாணவர் இல்லக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக *1995–96* ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. *4* கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாணவர் இல்லங்கள், பழங்குடியினருக்கான மாணவர் இல்லங்களுடன் கூடிய பள்ளிகள் கட்டுவதற்காக, *1995–96* வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. *61.50* இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டு கழகத்தில் பங்கு மூலதன முதலீடு

வங்கிகள், ஏனைய நிதியுதவி நிறுவனங்கள் அளிக்கும் கடன் வசதிகளைப் பயன்படுத்தி ஆதி திராவிடர்கள் தங்கள் பொருளாதார நிலைமையை மேம்படுத்திக் கொள்ள உதவும் வகையில், அவர்கள் செலுத்த வேண்டிய தொடக்கத் தொகையை வழங்கும் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் செயற்படுத்தி வருகிறது. இச்செயல் நோக்கத்திற்காக, *1995–96* ஆம் ஆண்டிற்கு ரூ. *6.50* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சத்துணவு

சிடா (SIDA) நிதி உதவி பெறும் குழந்தைகள் நல மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்ட வட்டாரங்களிலுள்ள குழந்தைகள் நல மையங்களுக்குக் கட்டிடங்கள் கடடுவதற்கு ரூ. *2* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

[1995 மே 5

ஏனைய சமூகப் பணிகள்

அரசுத் தொழில் பயிற்சி நிலையங்களை மேம்படுத்துவதற்காக ரூ. 36.46 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிதி உதவி பெறும் தொழில் திறமை மேம்பாட்டுத் திட்டம்.

1995-96 ஆம் ஆண்டில் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் கீழ்காணும் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக ரூ. 5.60 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

1.	சாதனங்களை நவீனமயமாக்குதல்	476.77
2.	சாதனம் பராமரிப்புப் பிரிவுகள்	1.30
3.	ஒலி, ஒளிச் சாதனங்கள்	0.01
4.	தொழிற்பயிற்சி நிறுவனங்களை விரிவு படுத்துதல்	10.14
5.	அடிப்படைப் பயிற்சி நிலையங்களையும் அவற்றோடு தொடர்புடைய பயிற்சி நிலையங்களையும் ஏற்படுத்துதல்	54.00
6.	வாழ்க்கைத் தொழில் உயர் பயிற்சித் திட்டத்தை விரிவு படுத்துதல்.	0.75
7.	மகளிர் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்	17.50
	மொத்தம்	560.47

மேற்சொன்ன செலவை, மாநில அரசும் மத்திய அரசும் சமமாக பங்கிட்டு செய்கின்றன.

கால்நடை வளர்ப்பு

கோயம்பத்தூரில் தற்போதுள்ள பல்தொழில் பயிலக கட்டிடத்தைப் புதுபிக்கவும், மாற்றியமைக்கவும், 1995-96 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கோயம்பத்தூரில் அறுவைச் சிகிச்சைக் கூடம் கட்டுவதற்காக ரூ. 2.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பால்பண்ணை மேம்பாடு

காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால்பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, 1995-96

1995 மே 5]

வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது; மாதாவரம் பால்பண்ணை குடியிருப்பில் பணியாளர் குடியிருப்புக் கட்டிடங்களை மேம்படுத்துவதற்காக ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மீனளம்

உள்நாட்டு மீனளம்

மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளுக்காக ரூ. 3.23 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

மீன்பிடி துறைமுகமும், பிடித்த மீன்களைக் கரை சேர்ப்பதற்கான வசதிகளும்:

மீன்பிடி துறைமுகங்களின் மேம்பாட்டுக்காகவும், பிடித்த மீன்களைக் கரைசேர்ப்பதற்கான வசதிகளின் மேம்பாட்டுக்காகவும், நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக ரூ. 50.14 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது; மீன்பிடி கிராமங்களில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ரூ. 27.01 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருள் சேமிப்பும் கிடங்கு வசதியும்

நேரடிக் கொள்முதல் நிலையங்களையும், கிடங்குகளையும் கட்டுவதற்காகத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குப் பங்கு மூலதன உதவித் தொகையாக ரூ. 2 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு

காமராஜர், தென் ஆர்காடு-வள்ளலார், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் கூட்டுறவு வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 331.49 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள்

கடல் அரிப்பு பாதித்துள்ள மீனவர் குப்பங்களில் கடல் அரிப்பைத் தடுக்கும் வண்ணம் பாறாங்கற்களைக் கொண்டு கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுவதற்காகவும், எண்ணூர் நெடுஞ்சாலை நெடுகிலும் கடல் அரிப்பைத் தட்டுப்பதற்காக பாறாங்கற்களாலான கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுவதற்காகவும், 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நுகர்வோர் தொழில்கள்

தோல் பதனிடு தொழிற்சாலைகளின் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் திட்டத்திற்குப் பங்கு மூலதன நிதியுதவியாக, *1995–96* வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. *1* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா

சுற்றுலா மேம்பாட்டிற்காக வீடுர் அணையில் மேம்பாட்டுப் பணிக்காக ரூ. *7* இலட்சமும், ஒகனேக்கல்லில் மேம்பாட்டுப் பணிக்காக *10.50* இலட்சமும், *1995–96* ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ. *1* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது; மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சுற்றுலா வளர்ச்சிக்காக ரூ. *23.01* இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS